[15th February 1958

SRI S. NAGARAJA MONIGAR : எத்தனையோ துறைகளிலே நாம் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறோம். அம்மாதிரி விமான நிலையங்கள் நாட்டில் அதிகமாக தேவையாக இருக்கும்பொழுது அதில் நாம் எந்தவிதமான முன்னேற்றமும் அடையவேண்டாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விமான நிலையங்கள் அமைப்பதிலும், விமானத்தில் பறப்பதிலும் முன்னேற்றம் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் நமக்கு எவ்வளவு தேவையோ அந்த அளவுக்குத்தான் கவனித்து எடுத்துக்கொள்ளப்படும்.

SRI M. KANDASAMI PADAYACHI : நெய்வேலியில் விஞ்ஞானிகளெல்லாம் வந்து இறங்கவேண்டியிருக்கிறது. ஆகையால் அங்கு விமான நிலையம் அவசியம். அதை மறுபடியும் திறப்பதற்கு யோசனை உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுதுகூட அந்த விமான நிலையத்தில் இறங்கலாம். நம் பிரதம மந்திரிகூட அதிலே இறங்கித்தான் நெய்வேலிக்குச் சென்றார்கள்.

SRI N. R. THIAGARAJAN : மதுரை ஒரு முக்கியமான நகரம். அதற்கு ஏற்கனவே விமானப் போக்கு வரத்து இருந்தது. ஆதலால் அந்த விமான நிலையத்தை தயவு செய்து சர்க்கார் கவனிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏர் லைன்ஸ் கார்பரேஷனோ அல்லது மற்றவர்களோ சர்வீஸ் நடத்துவதற்கு முன்வந்தால் நாம் அதற்கு வேண்டிய ஆதரவு அளிக்கலாம்.

Employment Exchanges

* 146 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to State whether recruitment is made by private factories through the Employment Exchanges in the respective districts?

THE HON. SRI R. VENKATARAMAN : It is not obligatory on the part of the private factories to recruit their man-power requirements through the Employment Exchanges. However, the services of the District Employment Offices in the districts are generally being made use of by a few private factories, purely on the basis of their good-will and co-operation.

SRI A. A. RASHEED : What is the total number of persons registered and what is the total number of persons who have secured employment?

THE HON. SRI R. VENKATARAMAN : I want a separate question to be put.

SRI P. S. CHINNADURAI : வேலை வாய்ப்பிலே தடையும் ஊழலும் ஒழிவதற்கு இம்மாதிரியான வேலை தேடித்தரும் ஸ்தாபனங்கள் பயன்படுமாகையால், இந்த ஸ்தாபனங்கள் மூலமாக புதிய தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர்களை எடுக்கவேண்டுமென்று சர்க்கார் சட்டம் கொண்டு வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த விஷயம் அகில இந்திய தொழிலாளர் முக்கூட்டு மகாநாட்டில் விவாதிக்கப்படுகிறது. அங்கு ஏதாவது முடிவு ஏற்பட்டால் அதற்கு மேற்கொண்டு சட்டம் மத்திய சர்க்கார் இயற்றும். ராஜ்ய சர்க்கார் இது விஷயத்தில் சட்டம் இயற்றுவது என்பது இயலாது.

15th February 1958]

SRI A. V. P. ASAITHAMBI : வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் 1955–56-ல் பதிவு செய்து கொண்டவர்களுக்குத்தான் இப்பொழுது வேலை கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வேலை கிடைக்காவிட்டால் மீண்டும் ரிஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டுமென்று வைத்திருக்கிறோம். அதன்படி அவர்கள் 'ஸீனியாரிடி' பிரகாரம் அந்தந்த வேலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். 'அன்-ஸ்கில்டு லேபர்' என்று சொல்லுகிறார்களே, அதாவது கிளர்க், பியூன் வேலை, தோட்ட வேலை இந்தமாதிரி வேலைகள் சம்பந்தப்பட்டவரையில்தான் கனம் அங்கத்தினர் சொல்லுவது உண்மை.

SRI S. NAGARAJA MONIGAR : வேலை தேடித்தரும் ஸ்தாபனம் எவ்விதம் வேலை செய்கிறது, அதோடு பொதுமக்கள் எந்த விதத்தில் ஒத்துழைத்து அதற்கு வெற்றியை தேடிக்கொடுக்கலாம் என்பதற்கு பிளானிங் போர்டு கூட்டத்தில் அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களையும் கலந்து கொள்ளும்படிச் செய்வார்களா என்று கேட்கிறேன்?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது இருக்கும் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தின் உத்தியோகஸ்தர்கள் ஆங்காங்கு இருக்கிற மில் முதலாளிகள் பாக்டரி வைத்திருப்பவர்கள் இவர்களிடம் நேரடியாகச் சென்று அவர்களுக்குத் தேவையான ஊழியர்களை தங்கள் ஸ்தாபனத்தின் மூலமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஓரளவு பாக்டரி அதிபர்களும் அவ்வாறு அந்த ஸ்தாபனத்தை உபயோகப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்குமேல் பிளானிங் போர்டு கூட்டத் திற்கு அவர்களை அழைப்பது இதைவிட அதிகமாக உபயோகமாக இருக்கும் என்று நினைக்கவில்லை.

Shenbagavalli Anaicut

* 147 Q.—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Home be pleased to state the reasons for the long delay in sanctioning the estimate for repairing the Shenbagavalli Anaicut in Sivagiri village, Tirunelveli district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have sanctioned the estimate for the scheme. The concurrence of the Kerala Government to its execution is awaited.

SRI C. SADAYAPPA MUDALIAR : இது கேரள கவர்ன்மெண்டு சம்பந்தமில்லாத திட்டம் என்று தெரியவருவதால், இதை உடனடியாக எடுத்து நடத்துவது பற்றி சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு மட்டும் தெரியவந்தால் போதாது. இந்த அரசாங்கம் கேரள அரசாங்கத்தின் அனுமதியையும், அங்கிகாரத்தையும் பெறுவதுதான் சரி. கேரள அரசாங்கத்திற்கு இது பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவர்களை மறுபடியும் ஞாபகப்படுத்தியிருக்கிறோம்.

Beedi Factories

* 148 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether Beedi factories have been brought under the governance of the Factories Act, 1948; and

(b) if not, the reasons therefor?